**தலைப்பு 158 – பொது தொழில் முயற்சி, கண்டிய மரபுரிமை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொது தொழில் முயற்சி, கண்டிய மரபுரிமை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான பொது தொழில் முயற்சி, கண்டிய மரபுரிமை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 மே 28 ஆந் திகதியன்று கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, 2019 டிசம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாயரித்த அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது தொழில் முயற்சி, கண்டிய மரபுரிமை மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கும் இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான நிதிக்கூற்றுக்களை மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் பொறுப்பாவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து அதனைப் பேணுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டுவதுடன், அதன் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வுகளை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்யவும் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவது என்பன எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்கள் அற்றதென வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களில் தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிரயாத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாட்டினது ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதாதபோதும், சந்தர்ப்பத்திற்கு உசிதமானவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளது உசிதமான தன்மை கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை, முகாமைத்துவத்தின் சம்பந்தமுடைய வெளிப்படுத்தல்கள் பரிசீலிக்கப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் வசதியானவாறும் நியாயமானவாறும் உள்ளடங்கிள்ளன என்பதும்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டபூர்வத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்து வருகின்றன.

(ஆ) இவ் அறிக்கையின் 1.6.1(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடரபாக முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நெடுஞ்சாலைகள் மற்றும் உயர் கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட ரூபா 64,500,000 பெறுமதியான 3 வாகனங்கள் 2018 மார்ச் தொடக்கம் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டதுடன், அவற்றின் உரித்தைச் சுவீகரித்து நிலையான சொத்து அசைவு அறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகன உரித்தைச் சுவீகரித்து நிலையான அசைவு அறிக்கையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் பெறுமதியிடப்பட்டு கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 ஆகஸ்ட் 3 ஆந் திகதிய 250/2016(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சு இயங்கும் கட்டிட வளாகத்திற்கு 2015 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 22,351,352 ஆரம்ப வைப்பு அந்த ஆண்டின் செலவினமாக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | இது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் எதிர்வரும் மேற்கொள்ளப்படும். |

### 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,816,973 முற்பணமானது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 409,020 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | அரச உத்தியோகத்தர் களது முற்பணக் கணக்கின் பிரகாரம் காசாகப் பெறப்படும் சகல கொடுப்பனவுகளும் பெறுவனவுகளும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். | கடன் தவணைப் பணமாகவும் வட்டியாகவும் ரூபா 409,020 மாத்திரமே பெறப்பட்டது. |
| (ஆ) | முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசாக வழங்கப்பட்ட ரூபா 5,054,375 முற்பணக் கொடுப்பனவு குறித்துக் கொள்ளப்படவில்லை. | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கின் பிரகாரம் சலக காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டும். | வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்பு மாற்றங்களின் கீழ் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. |

### 1.6.3 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணை வைப்புச் செய்ய வேண்டியவர்களது தகவல்கள் அடங்கிய பிணை வைப்புப் பதிவேடு பேணப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) க்கமைய பிணை வைப்புப் பதிவேடு பேணப்பட வேண்டும். | பிணை வைப்புப் பதிவேடு பேணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 453 க்கமைய ஆளுக்குரிய வேதனப் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை | நிதிப்பிரமாணம் 453 க்கமைய 17 ஆம் திறைசேரி மற்றும் கணக்காய்வு மாதிரிப் படிவத்துக்கமைய ஆளுக்குரிய வேதனப் பதிவேடு பேணப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | எட்டுச் செலவின விடயங்களுக்கு ரூபா 197,650,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டபோதும், அதில் ரூபா 69,885,524 கூட்டுத் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டதால் ரூபா 127,764,476 செலவிடப்படாது எஞ்சியிருந்தது. அது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 25 முதல் 100 சதவீதம் வரையில் அமைந்திருந்தது. | ஏற்பாடு செய்த நிதியை வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும். | பொருட்கள் கொள்வனவு செய்யப்படாமை, மூலதனத் தன்மை வாய்ந்த பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமை, 5/2019 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினத்தை முகாமைத்துவம் செய்தமை ஆகியவற்றால் ஏற்பட்டவை. |
| (ஆ) | நான்கு செலவின விடயங்களுக்கு ரூபா 50,650,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டபோதும், அச் செலவின விடயங்களுக்கு எதுவித செலவினமும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி 158-1-2-3-2202 செலவின விடயத்தின் கீழ் கந்த உடரட்ட மரபுரிமை அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு 2019 செப்டம்பரில் ரூபா 50,000,000 | ஏற்பாடு செய்யப்பட்ட நிதியை சரி கூடியளவு பயன்படுத்த வேண்டும். | 5/2019 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கைப் பிரகாரம் செலவினத்தை முகாமைத்துவத்திடம் வேண்டி ஏற்பட்டதாலும் பற்றாக்குறையாலும். |

குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தும் காலப் பற்றாக்குறை காரணமாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் அமுலாக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கீழ் உள்ள அரச வள முகாமைத்துவக் கூட்டுத் தாபனம் 05 ஆண்டுகளின் போது எதுவித பணிகளையும் ஆற்றியிராததால் 2019 டிசம்பர் 10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் அந் நிறுவனம் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் கீழ் உள்ள நியதிச்சட்ட நிறுவனங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தை மீள வியூகப்படுத்துவது அமைச்சின் ஒரு பணியாகிய போதும், 05 ஆண்டுகளாகியும் பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை முடிவடையாததால் மீள வியூகப்படுத்தல் நடைபெறவில்லை. பீ.சீ.சீ கம்பனியினது மீள வியூகப்படுத்தும் அமுலாக்கப்படவில்லை. | அமைச்சின் பணிகளில் தீவிர கவனம் செலுத்தி முன்னுரிமையைப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டும். | மீளப் வியூகப்படுத்தல் நடைபெற்ற வாறுள்ளது. |
| (இ) | 2018 சனவரி 12 ஆந் திகதிய அமப/17/2758/733/047 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, எல்கடுவ | அமைச்சின் கீழான பணிகள் துரிதமாக திறைசேரி பொதுமக்களது சேவை துரிதமாக நடைபெற வேண்டும். | திறைசேரியினதும் அமைச்சரவையினதும் அங்கீகாரத்துடன் பணம் பெறப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | பெருந்தோட்டக் கம்பனி, இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், கல்ஓயா பெருந்தோட்டக் கம்பனி ஆகிய பெருந்தோட்டக் கம்பனிகளில் மீளவியூகப்படுத்தல் வேலைகள் உடனடியாக நடைபெற வேண்டும். எனினும், அமைச்சரவையானது கொள்கை ரீதியாக அங்கீகாரம் வழங்கியபோதும், ஆண்டின் இறுதிவரை அப்பணிகள் நிறைவேறவில்லை. மேலும், நிறுவனங்களை மீள வியூகப்படுத்துவதற்கு சம்பளமும் விடுமுறை நாட் சம்பளமுமாக ரூபா 3,004 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | பெருந்தோட்டக் கம்பனிகளது மீளவியூகப்படுத்தலுக்கான நில அளவை மற்றும் காணி வரம்பை இனங்கண்டு கொள்வதற்கு வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 25 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டபோதும், அவற்றுள் எப்பணிகளுமே மீளாய்வாண்டில் நடைபெறவில்லை. அவ்வாறே, அளவையாளர்களை கண்டு பிடிப்பதற்கும் வரம்பை இலக்கிடவும் மாத்திரமே ஆலோசனை வழங்கப்பட்டிருந்தேயொழிய, எக் காணியினது வரம்பும் அளவை நடவடிக்கைகள் முடிவடையவில்லை. | அமைச்சிடம் ஒப்படைக்கப்படும் பணிகள் துரிதமாக நிறைவேற்றப்படுவதன் மூலம் மக்கள் எதிர்பார்க்கும் சேவை நிறைவேற வேண்டும். | பெருந்தோட்ட கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 07 பர்ச்சஸ் வீதம் காணி அளவிடப்பட்டு அதற்கென ரூபா 1.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. |

**3.2 செயற்திட்ட அமுலாக்கலில் உள்ள நலிவுகள்**

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| | ---------------------------------------- | ------------------------------- | ----------------------------- |
| (அ) | கந்த உடரட்டவுக்குச் சொந்தமான பிரதேசத்திலும் கண்டி மாவட்டத்திலும் சமூக மற்றும் பொருளாதார | மேலும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதாக உள்ள பணம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்கு ரூபா 1,047,000,000 குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் 1106 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூபா 473,309,109 செலவிடப்பட்டிருந்தது. மேலும், கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 237,472,608 பொறுப்புக்கள் நிதியேற்பாடு 2020 ஆகஸ்ட் 31 வரை அங்கீகரிக்கப்படாதிருந்தது. | | |
| (ஆ) | இச் செயற்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 1303 செயற்திட்டங்களில் 950 செயற்திட்டங்களும், அதாவது, 73 சதவீதமும் கண்டி மாவட்டத்தின் பொருட்டு அமுலாக்கப்படுவதற்கு ஆலோசிக்கப்பட்டிருந்தனவாகும் எஞ்சிய 05 மாவட்டங்களுக்குமென அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களது எண்ணிக்கை 353 மாத்திரமே. அது 27 சதவீதமாகும். | செயற்திட்டத்திற்கான நிதியேற்பாட்டில் அடங்கும் கனத்தை முறையாக இனங்காண வேண்டும். | செயற்திட்டத்திற்கான ஆலோசனை கோரப்பட்ட போது கண்டி மாவட்டத்தை மையமாகக் கொண்டே பலநோக்கு செயற்திட்ட ஆலோசனைகளும் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன. |
| (இ) | கந்த உடரட்ட சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களை அபிவிருத்தி செய்து சுற்றுலாக் கவர்ச்சியை உருவாக்குவதற்கு 13 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 4 செயற்திட்டங்கள் மாத்திரமே அமுலாக்கப்பட்டிருந்தன. இச்செயற்திட்டங்களில் எவையுமே பூர்த்தியாகவில்லை. நுவரெலியா போன்ற சுற்றுலாக் கவர்ச்சி மிக்க மாவட்டத்திற்கு ஒரு செயற்திட்டம் மாத்திரமே அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. | திட்டமிட்ட செயற்திட்டங்களைத் துரிதமாக அமுலாக்கி எதிர்பார்த்த நோக்கத்தை அடைய வேண்டும். | தேசிய வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம், 02 செயற்திட்டங்களை செலவினக் குறைப்பிற்காக கைவிட வேண்டி ஏற்பட்டது. ஒரு செயற்திட்டம் தொல்பொருள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு அமுலாக்கப்படாது போனது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பதுளை மாவட்டத்தில் 2 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு ரூபா 3,200,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டம் அமுலாகாததால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி திருப்பி பெறப்பட்டது. | நிதிஏற்பாடு செய்யப்படுவதற்கு முன்னரே செயற்திட்டத்தை அமுலாக்க முடியுமா என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். | தேசிய வரவு, செலவுத் திட்டத் திணைக்களம், நிதி அமைச்சு மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களின் படி அரசு செலவின முகாமைத்துவ நோக்கத்துடன் ஒரு செயற்திட்டம் அமுலாகவில்லை. மற்றைய செயற்திட்டம் மாவட்டச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அமுலாக்கப்பட வில்லை. |
| (உ) | நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,265,000 பெறுமதியான 3 செயற்திட்டங்களுக்கு அந்த உடரட்ட பாதுகாப்புக்கு உள்ளக் நியதிச்சட்ட சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளரது பரிந்துரை இல்லாததால் அச்செயற்திட்டத்தை அமுலாக்குவது அமைச்சினால் இடைநிறுத்தப்பட்டு அமுலாக்கப்படவுள்ள திட்டத்திலிருந்தும் நீக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக, அந் நிதி ஏற்பாட்டைத் திறைசேரி மீளப் பெற்றிருந்தது. | நிதிஏற்பாடு செய்யப்படுவதற்கு முன்னர் தேவையான பரிந்துரையைப் பெற வேண்டும். | செயற்திட்டத்திற்குத் தேவையான பரிந்துரை வழங்கப்படாததால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி மீளப் பெறப்பட்டது. |
| (ஊ) | ஏனைய வழிபாட்டு ஸ்தலங்களின் அபிவிருத்திக்குரிய ரூபா 2,500,000 பெறுமதியான 2 செயற்திட்டங்களோடு நிதிஏற்பாடு செய்யப்பட்டபோதும், இந்த ஸ்தலங்கள் பதிவு செய்யப்பட்டிராததால் பிரதேச செயலகங்களால் இந்த நிதி மீளப் பெறப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடு செய்யப்படுவதற்கு முன்னர் செயற்திட்டத்தை அமுலாக்க முடியுமோ எனக் கருத்திற் கொள்ள வேண்டும். | இந்த ஏனைய வழிபாட்டு ஸ்தலங்கள் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டனவா தலாலும் அவை 2010 க்கு முன்னர் பதிவு செய்யப்பட்டவை ஆதலாலும் நிதி மீளப் பெறப்பட்டது. |

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கந்த உடரட்ட மரபுரிமைக்குரிய பாரம்பரிய பொதுசன விளையாட்டுப் பங்குபற்றலுடன் கண்டியில் நடைபெற்ற பசுமையான சித்திரைப் புத்தாண்டு விழாவை நேரடியாக ஒளிபரப்பவும் முன்னோடிப் பிரசார நடவடிக்கைகளுக்கும் சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கும் கந்துரட்ட சேவைக்கும் ரூபா 1,809,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அமைச்சின் நோக்கத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளுக்கு அரச நிதியைச் செலவிடலாகாது. | மலைநாட்டிற்கே உரிய பொதுமக்களது கலாசார நோக்கத்துடன் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. |